பதற்காக நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களிலே 8,919 மாணவர்கள் இதிலே ஈடுபட்டு இருக்கிறார்கள், சுமார் 37,284 ரூபாய் சேர்க்கப் பட்டிருக்கிறது. கோயம்புத்தூரில் 8,303 மாணவர்கள் சேர்ந்திருக் கிறார்கள், சுமார் ரூ. 1,10,716 சேர்க்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலேயும் குறிப்பிட்ட அளவிற்கு இருக்கிறது. மொத்த எண்ணிக்கையைக் கணக்கிட்டால் குறைந்த அளவிற்குத்தான் இருக்கும். இதையெல்லாம் பெருக்குகின்ற முயற்சியில் அரசு ஈடுபட்டு இருக்கிறது.

இரணியலில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி

***5 வினா—**திரு. ஏ. பாலையா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், இரணியலில் பெண்களுக்கு என தனியாக அரசு உயர்நிலைப்பள்ளி ஒன்று நிறுவும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. ஏ. பாலையா: தலைவர் அவர்களே, இரணியலில் அரசு உயர் நிலைப்பள்ளி இருக்கிறது. அங்கே இரண்டாயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் பயின்று வருகிறார்கள். அதிலே பெரும்பாலும் பெண்கள் படித்து வருகிறார்கள். ஆனால் இந்தப் பள்ளியிலே போதுமான இடவசதியில்லாத காரணத்தால் ஏராளமான மாணவர்கள் வெளியிடங்களுக்குச் செல்லவேண்டிய நிலைமையிருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு இரணியலில் பெண்களுக்கு என்று தனியாக ஒரு உயர்நிலைப்பள்ளியைத் தொடங்க அரசு அனுமதியளிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இரணியலில் அரசினர் உயர்நிலைப்பள்ளியொன்று ஏற்கெனவே இருக்கிறது. அதிலே ஆறு முதல் 11 வகுப்புகள் வரையிலும் இருக்கின்றன. அதிலே 1.066 மாணவர்கள் படித்து வருகிறார்கள். மாணவியர்கள் 657 பேர்கள் படித்து வருகிறார்கள். ஆகவே, தனியாக பெண்கள் உயர்நிலைப்பள்ளி வைக்க எண்ணிக்கை போதுமா என்றால் போதும். பக்கத்திலே 3-வது மைலிலே எல்.எம்.எஸ். உதவிபெறும் பள்ளி ஒன்று இருக்கிறது, அதிலே

எழுநூற்றுச் சில்லரை பேர்கள் பயின்று வருகிறார்கள். ஆகவே, ஆயிரத்து சில்லரை மாணவர்கள் பயின்று வருகிறார்கள். தனியார் துறையிலே அங்கே பெண்களுக்கு என்று தனியாக ஒரு பள்ளி தொடங்கவேண்டுமென்றால் அதற்காக என்று ஐந்து ஏக்கர் நிலமும் அதற்காகப் போடப்படுகின்ற நிபந்தனைகளை நிறைவேற்றுகின்ற தன்மையும் இருக்குமானால் பெண்கள் பள்ளி வைப்பதற்கான நடவடிக்கையை அரசு கவனத்தில் கொள்ளலாம்.

Medicinal Chemistry Research Centre.

*6. *Q*.—THIRU N. K. **PALANISAMY**: Will the **Hon.** the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that Medicinal Chemistry Research Centre is functioning in the State; and

(*b*) whether there is any proposal under consideration to open such centres in all districts?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. என். கே. பழனிசாமி: இதுவரையில் நடத்திய ஆராய்ச்சியின் பயன் என்ன? என்ன என்ன விஷயங்கள் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன? இதை ஜில்லாக்களுக்கும் விஸ்தரிப்பதன் மூலமாக அங்கேயும் சௌகரியங்கள் ஏற்படுமல்லவா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மெடிசினல் கெமிஸ்ட்ரி என்ற மருத்துவம் குறித்த இரசாயன ஆராய்ச்சித் துறை செயல்பட்டு வருகிறது. திறமைபெற்றவர்கள் என்று சொல்லப்படுகின்றவர்கள் சென்னையிலே இரண்டு மூன்று கல்லூரிகளைச் சேர்ந்த பேராசிரியர்கள், மாநிலக் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர், பொது மருத்துவ மனைக் கல்லூரியைச் சேர்ந்த இரண்டு பேராசிரியர்கள் இவர்கள் இணைந்து சென்னை பொது மருத்துவ மனைக் கல்லூரியில் இந்த ஆராய்ச்சியை நடத்தி வருகிறார்கள். தனி அமைப்பாக இந்த ஆராய்ச்சியை நடத்திக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, பரவலாக நடத்தப்படக் கூடிய ஒன்று அல்ல இது. இதை நடத்துவதற்கு அதிகத் தேர்ச்சி பெற்றவர்கள் தேவை. இந்த ஆராய்ச்சியின் பலன்கள் மருத்துவக்